www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSL

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

**8 - ஆம் வகுப்பு**

## அறிவியல்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடு.** **10 X 1 = 10**

1. பாஸ்கல் விதி இதில் பயன்படுகிறது
அ) நீரியல் உயர்த்தி ஆ) தடை செலுத்தி (பிரேக்) இ) அழுத்தப்பட்ட பொதி ஈ) மேற்கண்ட அனைத்தும்
2. வெப்பக்கடத்தல் முறையில் வெப்ப ஆற்றல் பரிமாற்றம் ......... ல் நடைபெறும்.
அ) திடப்பொருள் ஆ) திரவப் பொருள் இ) வாயுப் பொருள் ஈ) அனைத்தும்
3. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி
அ) ஹார்மோனியம் ஆ) புல்லாங்குழல் இ) நாதஸ்வரம் ஈ) வயலின்
4. கரிக்கோலின் (பென்சிலின்) நடுத்தண்டில் இருப்பது
அ) கிராஃபைட் ஆ) வைரம் இ) அலுமினியம் ஈ) கந்தகம்
5. அசோட் எனப்படுவது எது?
அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன் இ) சல்பர் ஈ) கார்பன் டை ஆக்ஸைடு
6. எந்த வெப்பநிலையில் நீர் பனிக்கட்டியாக மாற்றமடையும்?
அ) 0°C ஆ) 100°C இ) 102°C ஈ) 93°C
7. அமிலங்கள் ...... சுவையை உடையவை.
அ) புளிப்பு ஆ) இனிப்பு இ) கசப்பு ஈ) உப்பு
8. உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை .......... .
அ) புரோட்டோசோவா ஆ) வைரஸ் இ) பாக்டீரியா ஈ) பூஞ்சை
9. ............ செல்கள் சிறப்பு வாய்ந்த செல்களாகும். இவை உடலின் எந்த ஒரு செல்லாகவும் மாற இயலும்
அ) நரம்பு ஆ) மூல இ) இதய ஈ) எலும்பு
10. ........ வயதிற்கு இடைப்பட்ட காலம் வளரிளம் பருவம் எனப்படும்.
அ) 10 முதல் 16 ஆ) 11 முதல் 17 இ) 11 முதல் 19 ஈ) 11 முதல் 20

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 10 x 1 = 10

11. திண்மக் கோணம் ........... என்ற அலகால் அளக்கப்படுகிறது.
12. கோளக ஆடியின் வடிவியல் மையம் ........... எனப்படும்.
13. மின்னல் தாக்குலில் இருந்து கட்டடங்களைப் பாதுகாக்கும் சாதனம் ........ .
14. ....... உரமாகப் பயன்படுகிறது.
15. ........... என்பது ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள்
16. நீர் நிறமற்றது, மணமற்றது மற்றும் ............
17. குளவியின் கொடுக்கில் ......... அமிலம் உள்ளது.
18. அகார் அகார்......... என்ற பாசியிலிருந்து பெறப்படுகிறது.
19. ........ தசை கண்பாவையை அகலமாக்குகிறது.
20. இரும்புச்சத்து பற்றாக்குறை ......... க்கு வழிவகுக்கிறது.

**III பொருத்து.** 5 x 1 = 5

21. பாதரசமானி - உராய்வை நீக்கும்
22. தொடுபரப்பை அதிகரித்தல் - வளிமண்டல அழுத்தம்
23. தொடுபரப்பை குறைத்தல் - உராய்விற்கான காரணம்
24. உயவுப் பொருள்கள் - உராய்வை அதிகரிக்கும்
25. ஒழுங்கற்ற பரப்பு - உராய்வைக் குறைக்கும்

**IV சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றை திருத்தி எழுதுக.** 5 x 1 = 5

26. தூண்டல் முறையில் மின்னேற்றம் செய்யப் பயன்படும் ஒரு கருவி நிலைமின்காட்டி.
27. கடின நீரில் சோப்பு நன்கு நுரையினைத் தரும்.
28. அமிலங்கள் அரிக்கும் தன்மையைக் கொண்டவை.
29. கீல் மூட்டு சற்று நகரக் கூடிய மூட்டு.
30. சுத்தமான கழிவறைகளை மலம் கழிக்கப் பயன்படுத்துதல் ஒரு நல்ல பழக்கமாகும்.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DISTRICT
PH:9003373506



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**V ஏதேனும் 15 கேள்விகளுக்கு மட்டும் விடையளி.** 15 x 2 = 30

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DISTRICT
PH:9003373506

31. மோல் – வரையறு.
32. ஒரு வளிமண்டல அழுத்தம் வரையறு.
33. ஒளி எதிரொளிப்பு விதிகளைக் கூறுக.
34. ஒரு கலோரி – வரையறு.
35. புவித் தொகுப்பு என்றால் என்ன?
36. மரங்களை நடுவது எவ்வாறு ஒலி மாசுபாட்டைக் குறைக்க உதவுகிறது?
37. அலங்கார நகை தயாரிப்பில் பயன்படும் உலோகங்களைக் குறிப்பிடுக.
38. வினைவேக மாற்றம் என்பதை வரையறு.
39. நைட்ரஜனின் பயன்கள் யாவை?
40. வேதிச் சமன்பாடு என்றால் என்ன?
41. கீழ்க்காணும் கூற்றுக்கு காரணம் கூறுக. நீர் ஒரு சர்வ கரைப்பான்.
42. நிறங்காட்டி என்றால் என்ன?
43. நோய்க்கிருமிகள் என்றால் என்ன?
44. இரு விதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.
45. புரோகேரியாடிச் செல் – வரையறு.
46. தசை நார் என்றால் என்ன?
47. இரண்டாம் நிலை பால் பண்புகள் என்றால் என்ன?
48. **கோடிட்ட இடத்தை நிரப்புக.**
    1) தனி ஊசலின் அதிர்வுகள் ............. என்றும் அழைக்கப்படுகின்றன.
    2) அதிர்வுறும் கம்பியின் தடிமன் அதிகரித்தால் அதன் சுருதி ................ .
49. **சரியா அல்லது தவறா என எழுதுக. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக.**
    i) மனிதன் ஒரு வெப்ப இரத்த பிராணி.
    ii) முன் கண்ணறை திரவம் கண்ணின் திரவத்தைப் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
50. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| i) நைட்ரஜன் | – | உயிரினங்களின் சுவாசித்தல் |
| ii) ஆக்சிஜன் | – | உரம் |
| iii) கார்பன் டை ஆக்சைடு | – | குளிர்விப்பான் |
| iv) உலர்பனி | – | தீயணைப்பான் |

**VI ஏதேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 x 3 = 15

51. மின் முலாம் பூசுதலுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
52. ஒலி மாசுபாட்டில் விளைவுகள் யாவை?
53. குழி ஆடி மற்றும் குவி ஆடிகளின் பயன்களுள் இரண்டினை தருக.
54. கீழ்க்காணும் சேர்மங்களின் பெயர்களை எழுதுக. அ) CO ஆ) $N_2O$ இ) NO
55. நீரின் கடினத்தன்மையை நீக்கும் முறைகள் யாவை?
56. அமிலங்கள் மற்றும் காரங்களுக்கு இடையேயான ஒற்றுமைகள் யாவை?
57. கண்ணை ஏன் புகைப்பட கருவியுடன் ஒப்பிடுகிறோம்?
58. மனித உடலில் எலும்புக் கூட்டின் செயல்பாடுகள் யாவை?

**VII ஏதேனும் 5 வினாக்களுக்கு விரிவாக விடையளி.** 5 x 5 = 25

59. கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
60. பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும்.
61. வெப்பக் குடுவை வேலை செய்யும் விதத்தினை விளக்குக.
62. உணவுப் பொருட்கள் எவ்வாறு வேதி வினைகளால் பாதிக்கப்படுகின்றன என்பதை விளக்குக.
63. கீழ்க்காணும் சேர்மங்கள் ஆக்சிஜனுடன் எரியும் போது உருவாகும் பொருட்களை எழுதுக.
    அ) கார்பன் ஆ) சல்பர் இ) பாஸ்பரஸ் ஈ) மெக்னீசியம் உ) இரும்பு
64. மருத்துவத் துறையில் நுண்ணுயிரிகள் எவ்வாறு பயன்படுகின்றன?
65. ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரங்களுக்கு இடையே உள்ள ஐந்து வேறுபாடுகளை எழுதுக.
66. மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து பாகங்களைக் குறி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com